தகவல் அறியும் உரிமைச்சட்டம் – 2005

**பொதுத்தகவல் வழங்கும் அலுவலர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (மேல்நிலை)**

ந.க.எண்.1130/ஆ4/2023, நாள். 09.03.2023

| | |
|---|---|
| பொருள் | தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005–ன்கீழ் திரு.ப.இராதாகிருஷ்ணன் என்பாரின் மனு உரிய நடவடிக்கைக்கு அனுப்புதல் – சார்பு. |
| பார்வை | 1. சென்னை–6, பள்ளிக் கல்வி ஆணையரகம், பொது தகவல் வழங்கும் அலுவலர் (ம) துணை இயக்குநர் (மின் ஆளுமை) அவர்களின் கடிதம் ந.க.எண்.007603/பிடி1/ /இ3/2022, நாள். 02.03.2023.<br>2. சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ப.இராதாகிருஷ்ணன், என்பாரின் மனு , நாள். 09.02.2023. |

பார்வை 1–ல் காணும் கடிதத்தின்படி சிவகங்கை மாவட்டம், திரு.ப.இராதாகிருஷ்ணன் என்பார் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரியுள்ள தகவல் மனுவின் நகல் இத்துடன் இணைத்து உரிய தொடர் நடவடிக்கைக்காக தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 6(3)–ன்படி அனுப்பப்படுகிறது.

எனவே, மனுதாரர் கோரியுள்ள தகவல் மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை உரிய காலகெடுவுக்குள் மனுதாரருக்கு அனுப்பி விட்டு அதன் நகலினை, இவ்வலுவலகத்திற்கும் அனுப்பிவைக்குமாறு வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், இது சார்பாக வேலூர், மாவட்டக் கல்வி அலுவலர் (இடை நிலை) மற்றும் (தொடக்கக் கல்வி) தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் முக்கியத்துவம் கருதி மனுதாரருக்கு உரிய காலக்கெடுவிற்குள் தகவல் வழங்கிடுமாறும், பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறித்திடுமாறு தெரிவிக்கப்படுகிறது. இதில் காலதாமதம் ஏற்படுமாயின் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்தின் பொது தகவல் வழங்கும் அலுவலர் (இடைநிலை) மற்றும் (தொடக்க கல்வி) மற்றம் பள்ளித் தலைமை ஆசிரியர்களே முழு பொறுப்பு ஏற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு–
மனுவின் நகல்

பொது தகவல் வழங்கும் அலுவலர்
மற்றும் முதன்மைக் கல்வி அலுவலரின்
நேர்முக உதவியாளர்.

பெறுநர்

1. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை) மற்றும் (தொடக்கக் கல்வி) (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது)
2. அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல் – 1. சென்னை–6, பொதுத் தகவல் வழங்கும் அலுவலர் (ம) துணை இயக்குநர் (மின் ஆளுமை) ( அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

2. திரு.ப.இராதாகிருஷ்ணன், த.பெ. திரு. க. பாண்டி,
999, மேலத் தெரு, வடக்கு சாலைக் கிராமம்,
இளையான்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்–630 710.

//ப.த.//